# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை: **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப(ஓ).,**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

<u>ஆணை எண். 68/ந/2025, நாள் 19.12.2025</u>

R. கார்த்தி,
மன்னார்குடி,
திருவாரூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
மன்னார்குடி நகராட்சி,
திருவாரூர் மாவட்டம். – எதிர்மனுதாரர்

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, கிருஷ்ணன் தெரு, எண்.12–A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. கார்த்தி என்பவரது 24.01.2025 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 27.01.2025 அன்று பெறப்பட்டு, 68/ந/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி, கிருஷ்ணன் தெரு, எண்.12–A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. R. கார்த்தி என்பவர் 24.01.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

“மன்னார்குடி வார்டு 1, பிளாக் 56, சர்வே நம்பர் 3541–ல் அமைந்துள்ள குளத்தின் கரையில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான நிலங்களில் ஆக்கிரமிப்பு அகற்றம் செய்ய 27.12.2024 அன்று தேதியிட்டு 7 நாட்கள் அவகாசம் அளித்து ஆக்கிரமிப்பாளர்களுக்கு மன்னார்குடி நகராட்சியால் ந.க.எண்.3618/2023/எப்1–ன்படி ஆக்கிரமிப்பு நீக்கம் செய்ய 27.12.2024–ல் அறிவிப்பு அனுப்பப்பட்டது. ஆனாலும் ஆக்கிரமிப்பாளர்களால் ஆக்கிரமிப்பு நீக்கம் செய்யப்படவில்லை.

மேற்குறிப்பிட்ட அறிவிப்பின்படியான உரிய கால அவகாசம் 03.01.2025 தேதியே முடிந்து விட்டது. அறிவிப்பு காலம் முடிந்தும் ஆக்கிரமிப்பு அகற்றப்படவில்லை என்ற உண்மையை நகராட்சி ஆணையாளர் திருமதி. சி. ந. சியாமளா மறைத்து ந.க.எண்.05/2025/எப்1 என்ற 07.01.2025 தேதியிட்ட கடிதத்தின் மூலம் ACTION TAKEN என்பதாக நகராட்சி இயக்குநருக்கு, மன்னார்குடி நகராட்சி ஆணையர் பதில் கடிதம் அனுப்பி உள்ளார். உரிய காலத்தில் ஆக்கிரமிப்பு அகற்றம் செய்ய நகராட்சி தவறி உள்ளது. நாளதுவரை ஆக்கிரமிப்பு அகற்றப்படவில்லை. இது ‘நடவடிக்கை’ என்பதன் வரையறையை மீறுவதாக அமைந்துள்ளது.

மன்னார்குடி நகராட்சி ஆணையாளரின் அக்கறையின்மையால் ஆக்கிரமிப்பு நீக்கப்படாமல் எருமை மாட்டின் மேல் மழை பெய்த மாதிரி என்ற சொலவடை போல உரிய காலத்தில் நடவடிக்கை இல்லாமல் சுரணையுணர்வற்று உள்ளது. ஆக்கிரமிப்பாளர்களின் குமாஸ்தா போன்று நகராட்சி ஆணையர் செயல்படுவதால் ஆக்கிரமிப்பு நீக்கப்படவில்லை.

இது குறித்து RDMA, தஞ்சாவூர் மண்டலம் அவர்களுக்கு அனுப்பப்படும் மனுக்கள் தட்டிக் கழிக்கப்படுகின்றன. ஆக்கிரமிப்பு நீக்கம் செய்விக்கப்படவில்லை என்பதே எனது குற்றச்சாட்டு.

பின்வரும் மூன்று நடவடிக்கைகளை எடுக்கப்பட கோருகிறேன்.

1) மேலும் மேலும் தாமதம் செய்யாமல் இடத்தை அளந்து அத்துக்காட்டி சர்வே கல் நடச்செய்விக்க RDMAக்கு அறிவுறுத்தப்படவும்.

2) ஏற்கனவே உரிய கால அவகாசங்கள் முடிந்துவிட்டபடியால் உடனடியாக ஆக்கிரமிப்பு நீக்கம் செய்யவும்.

3) இன்னும் 7 நாட்களில் ஆக்கிரமிப்பு நீக்கப்படாதபட்சத்தில் ஆக்கிரமிப்பு நீக்கத்திற்கான செலவு சம்பந்தப்பட்ட நகராட்சி ஆணையர் திருமதி. ச.ந. சியாமளா அவர்களிடம் இருந்து பாக்கியின்றி வசூல் செய்யப்படவும் கோருகிறேன்." என தெரிவித்துள்ளார்.

2) மனுதாரது புகார் குறித்து மன்னார்குடி நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 12.03.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3) எதிர்மனுதாரரான மன்னார்குடி நகராட்சி ஆணையரின் 18.08.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.3618/2024/எப்1–ல் கீழ்கண்டவறு விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"மன்னார்குடி நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.3618/2023/எப்1, நாள் 27.12.2024–ல் காணும் அறிவிப்பில் வார்டு எண்.1, பிளாக் எண்.56, நகரளவு எண்.3541 மஸ்தான் பள்ளித்தெரு குளம் புறம்போக்கு கரை இடத்தில் கட்டி உள்ள குடியிருப்பு கட்டிடங்களை அகற்ற அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆக்கிரமிப்பாளர்கள், குடியிருப்பு வீடுகளாக உள்ளதால் மாற்று இடம் வழங்கினால்தான் இடத்தினை காலி செய்வதாக கூறி வருகிறார்கள்.

புகார்தாரர் கூறும் இடம் நீர்நிலை புறம்போக்கு குளமாக உள்ளதாலும், அரசாணை (நிலை) எண்.64, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, நாள் 08.02.2022–ல் நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்ற வழிகாட்டு நெறிமுறைகள், வருவாய் துறையினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளதால், மேற்படி, ஆக்கிரமிப்புகளை அகற்ற மேல்நடவடிக்கை எடுக்கக்கோரி மன்னார்குடி வருவாய் கோட்ட அலுவலருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, 21 குடியிருப்பு வீடுகள் மற்றும் 2 சிறு கடைகள் வாழ்வாதாரம் பாதிக்கும் வகையில் உள்ளதால், ஆக்கிரமிப்புகள் அகற்றுவதால் சட்டம், ஒழுங்கு பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாலும், நகராட்சியினால் அகற்ற இயலவில்லை.

எனவே, அரசாணை (நிலை) எண்.64, நாள். 08.02.2022, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை LD 6(2) Section ஆக்கிரமிப்பு அகற்றுவது தொடர்பான Division Monitoring Committee வருவாய் பேரிடர் ஆட்சியர், வருவாய்துறை மன்னார்குடி மூலமாக நடவடிக்கை மேற்கொள்ள இவ்வலுவலக கடிதம் எண்.3618/2023/எப்1 நாள்.08.08.2025–ந் தேதியன்று மன்னார்குடி வருவாய் வட்டாட்சியருக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எனவே, நகராட்சியினால் ஆக்கிரமிப்புகளை அகற்ற இயலாத நிலையினை கருத்தில்கொண்டு மேற்படி, புகார் விசாரணையிலிருந்து மன்னார்குடி நகராட்சியினை ரத்து செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

4) மேலும், மன்னார்குடி வருவாய் கோட்டாட்சியருக்கு முகவரியிடப்பட்ட மன்னார்குடி நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க. எண். 3618/2025/எப்1, நாள் 08.08.2025–ல் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"மன்னார்குடி நகராட்சி ஆணையர் அவர்களின் அறிவிப்பு கடிதம் ந.க.எண்.3618/2023/எப்1, நாள் 27.12.2024–ல் வார்டு எண்.1, பிளாக் எண்.56, நகரளவு எண்.3541 மன்னார்குடி நகரம் ஆசாத்தெரு குளக்கரையின் மேல் கட்டப்பட்டுள்ள 21 வீடுகள், 2 கடைகள் மற்றும் குடியிருப்பு கட்டிடங்ளை அகற்ற ஆக்கிரமிப்பு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் சம்மந்தப்பட்ட ஆக்கிரமிப்பாளர்கள் ஆக்கிரமிப்புகளை அகற்றப்படாமல் உள்ளதால் மற்றும் குடியிருப்பு கட்டிடங்களாக உள்ளதாலும், நகராட்சி மூலம் ஆக்கிரமிப்பு அகற்ற இயலவில்லை. சம்மந்தப்பட்ட ஆக்கிரமிப்பாளர்களுக்கு மாற்று இடம் வழங்கினால் மட்டுமே இடத்தினை காலி செய்கிறோம் என தெரிவிக்கிறார்கள்.

அரசாணை (நிலை) எண். 64, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள் 08.02.2022–ல் நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்றுவற்கு சில வழிகாட்டி நெறிமுறைகள் அரசால் வகைப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, மேற்படி ஆக்கிரமிப்புகளை அகற்ற ஏதுவாக அரசாணையின்படி Division Monitoring Committee–க்கு பொருள் வைத்து நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், மாற்று இடம் வழங்கவும், நடவடிக்கை மேற்கொள்ளவும் கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

5) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான மன்னார்குடி நகராட்சி ஆணையர் ஆகியோருக்கு 26.08.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 08.08.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

6) மனுதாரர் திரு. R.கார்த்தி என்பவர் 26.08.2025 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் ஆஜராகவில்லை. மனுதாரர் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள மின்னஞ்சல் கடிதம் நாள் 26.08.2025–ல் தனக்கு அச்சுறுத்தல் உள்ளதால், தான் விசாரணைக்கு ஆஜராக விரும்பவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

7) எதிர்மனுதாரரான மன்னார்குடி நகராட்சி ஆணையரின் 25.08.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.2558/2024/எப்1–ல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாம் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவுத் திட்டம் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு விரிவாக்கம் செய்யும் விழா துவங்கப்பட இருப்பதால் 26.08.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு நகராட்சி நகரமைப்பு ஆய்வர் திரு. ஆர். கண்ணதாசன் என்பவரை கலந்து கொள்ள அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து மன்னார்குடி நகராட்சி நகரமைப்பு ஆய்வர் திரு. R.கண்ணதாசன் என்பவர் 26.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"மனுதாரர் தெரிவித்துள்ள புகாருக்குள்ளான இடம் நீர்நிலை புறம்போக்கு குளமாக உள்ளதால், நீர்நிலை ஆக்கிரமிப்புகளை அகற்ற வருவாய்துறையினரால் அறிவுறுத்தப்பட்ட மேற்படி ஆக்கிரமிப்புக்களை அகற்ற மன்னார்குடி வருவாய் கோட்ட அலுவலருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

குடியிருப்பு வீடுகள் மற்றும் சிறு கடைகள் வாழ்வாதாரம் பாதிக்கும் வகையில் உள்ளதால், ஆக்கிரமிப்புகள் அகற்றுவதால், சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனினும், அரசாணை (நிலை) எண். 64, நாள் 08.02.2022, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை ஆக்கிரமிப்பு தொடர்பாக Division Monitoring Committee வருவாய் பேரிடர் ஆட்சியர், வருவாய்துறை, மன்னார்குடி மூலமாக ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதனை இம்முறைமன்ற நடுவத்தின் முன் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

இம்முறைமன்றத்தால் மனுதாரரின் புகார்மனு மீது 12.03.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் இம்முறைமன்ற நடுவத்தால் கோரப்பட்ட அறிக்கைக்கு பதில் அறிக்கை அனுப்புவதில் காலதாமதம் ஏற்பட்டதற்கு போதிய பணியாளர்கள் இல்லாததே காரணம் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

8) மனுதாரருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு அளிக்கும் பொருட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான மன்னார்குடி நகராட்சி ஆணையர் ஆகியோரை 05.11.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 27.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

9) மனுதாரர் 05.11.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையிலும் ஆஜராகவில்லை.

10) எதிர்மனுதாரரான மன்னார்குடி நகராட்சி ஆணையரின் 03.11.2025 நாளிட்ட கடிதம் ந.க.எண்.2558/2024/எப்1–ல் தற்போது நடைபெற்று வரும் வாக்காளர் சிறப்பு தீவிர மறு ஆய்வு பணிகளுக்கு (Special Intensive Revision) உதவி வாக்காளர் பதிவு அலுவலராக நகராட்சி ஆணையர் செயல்படுவதால் 05.11.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு நகராட்சி நகரமைப்பு ஆய்வர் திரு. ஆர். கண்ணதாசன் என்பவரை கலந்து கொள்ள அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டதை தொடர்ந்து மன்னார்குடி நகராட்சி நகரமைப்பு ஆய்வர் திரு. R.கண்ணதாசன் என்பவர் 05.11.2025 அன்று நடைபெற்ற

விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தின் முன்பு நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"மன்னார்குடி நகராட்சி வார்டு எண்.1, பிளாக் எண்.56, நகரளவு எண்.3541 மஸ்தான் பள்ளி தெரு, குளம் புறம்போக்கு நிலத்தில் கட்டியுள்ள குடியிருப்பு கட்டிடங்களை அகற்ற நகராட்சியால் அறிவிப்பு வழங்கப்பட்டது. மேற்படி இடத்திலுள்ள ஆக்கிரமிப்புகள் குடியிருப்பு வீடுகளாக உள்ளதால் மாற்று இடம் வழங்கினால் தான் காலி செய்வதாக குடியிருப்பு வாசிகள் தெரிவித்துள்ளதாலும், மனுதாரர் தெரிவித்துள்ள இடம் நீர்நிலை புறம்போக்கு குளமாக உள்ளதாலும், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடத்திலுள்ள குடியிருப்பு வீடுகள் மற்றும் சிறு கடைகளை அகற்றுவதால் சட்டம், ஒழுங்கு பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால், ஆக்கிரமிப்புகளை அகற்றுவது தொடர்பாக அரசாணை (நிலை) எண்.64, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை, நாள் 08.02.2022–ன்படி Divisional Monitoring Committee–யை கூட்டி முடிவு செய்ய வருவாய் கோட்டாட்சியருக்கு 08.08.2025–ல் நகராட்சியில் இருந்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மேற்படி Committee எடுக்கும் முடிவின்படி நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரத்தினை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

11) மனுதாரரின் புகார் மனு, எதிர்மனுதாரரான மன்னார்குடி நகராட்சி ஆணையரின் அறிக்கை, மன்னார்குடி நகராட்சி நகரமைப்பு ஆய்வரின் வாக்குமூலங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மன்னார்குடி நகராட்சிக்கு சொந்தமான வார்டு 1, பிளாக் 56 சர்வே நம்பர் 3541–ல் அமைந்துள்ள குளத்தின் கரையில் உள்ள நிலங்களில் உள்ள ஆக்கிரமிப்புக்களை அகற்ற நகராட்சி நிர்வாகத்தால் அறிவிப்பு அனுப்பப்பட்டு, கால அவகாசம் அளிக்கப்பட்டும் ஆக்கிரமிப்புக்கள் அகற்றப்படாதது குறித்தும், ஆக்கிரமிப்புக்களை அகற்றி நகராட்சிக்கு சொந்தமான இடத்தை அளந்து அத்துக்காட்டி சர்வே கல் நடச்செய்ய RDMAக்கு அறிவுறுத்த கோரியுள்ள விவரம் மனுதாரரின் புகார் மனுவிலிருந்து அறியவருகிறது.

மனுதாரர் புகார் அளித்துள்ள மன்னார்குடி நகராட்சிக்கு சொந்தமான குளம் புறம்போக்கு கரையோர இடத்தில் கட்டி உள்ள குடியிருப்பு கட்டிடங்களை அகற்ற அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி இடத்தில் ஆக்கிரமிப்பாளர்களால் குடிருப்பு வீடுகளாகவும், கடைகளாகவும் கட்டப்பட்டுள்ளதால், மாற்று இடம் வழங்கினால்தான் இடத்தினை காலி செய்ய இயலும் என கூறுவதாலும், ஆக்கிரமிப்புகள் அகற்றுவதால் 21 குடியிருப்பு வீடுகள் மற்றும் 2 சிறு கடைகள் வாழ்வாதாரம் பாதிப்பதுடன், சட்டம், ஒழுங்கு பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளதால் நகராட்சியால் ஆக்கிரமிப்புகளை உடனே அகற்ற இயலாத நிலை உள்ளது என்ற விவரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலங்கள் வாயிலாக அறிய முடிகிறது.

மேலும், மேற்படி இடம் நீர்நிலை புறம்போக்கு குளமாக உள்ளதால், அரசாணை (நிலை) எண். 64, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள் 08.02.2022–ன்படி ஆக்கிரமிப்பு அகற்றுவது தொடர்பாக Division Monitoring Committee-யை கூட்டி வருவாய் பேரிடர் ஆட்சியர், வருவாய்துறை மன்னார்குடி மூலமாக நடவடிக்கை மேற்கொள்ள மன்னார்குடி வருவாய் கோட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ள விவரம் ஆணையரின் அறிக்கை மற்றும் நகராட்சி நகரமைப்பு ஆய்வரின் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது.

12) நகராட்சி ஆணையரின் சார்பில் ஆஜரான நகராட்சி நகரமைப்பு ஆய்வரின் வாக்கு மூலத்தில் பணியாளர் பற்றாக்குறையால் இம்முறைமன்ற நடுவத்திற்கு அறிக்கை அனுப்புவதில் காலதாமதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளதை இம்முறைமன்ற நடுவம் வண்மையாக கண்டிக்கிறது. இதுபோன்று பொறுப்பற்ற வகையில் பதில் அளிப்பதை தவிர்ப்பதுடன் எதிர்வரும் காலங்களில் காலதாமதம் ஏற்படா வண்ணம் இம்முறைமன்ற நடுவம் கோரும் அறிக்கைகளை விரைந்து அனுப்பி வைத்திட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மன்னார்குடி நகராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

மனுதாரரின் புகார் குறித்த நேர்வில், மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள இடம் நீர்நிலை புறம்போக்கு குளமாக உள்ளதால், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை மூலம் ஆக்கிரமிப்பு அகற்றுவது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது எனத்தெரிவித்துள்ள நகராட்சி ஆணையரின்

அறிக்கையினை ஏற்று, மன்னார்குடி நகராட்சி, வார்டு எண்.1, பிளாக் 56, சர்வே எண். 3451–ல் உள்ள குளத்தின் கரையில் ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள குடியிருப்புகள் சிறு கடைகள் அகற்றுவது குறித்து முறையான அறிவிப்பு வழங்கி, அரசு விதிமுறைகள், மாண்பமை உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதி மன்றங்களின் வழிகாட்டுதல்களின்படி உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மன்னார்குடி நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 19–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. R. கார்த்தி,
12–A, கிருஷ்ணன் தெரு,
மன்னார்குடி – 614 001.
திருவாரூர் மாவட்டம்.

2) நகராட்சி ஆணையர்,
மன்னார்குடி நகராட்சி,
திருவாரூர் மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

23/12/25
செயலாளர்.

23/12
6/7

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032